செய்தி வெளியீடு எண் : 1235 நாள் : 19.08.2024

# <u>செய்தி வெளியீடு</u>

**<u>தெற்கு இரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைந்திருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இரட்டைப் பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு இன்று (19–8–2024) எழுதியுள்ள கடிதத்தில், 2024–2025 நிதியாண்டில் வழக்கமான இரயில்வே பட்ஜெட்டில், தெற்கு இரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்திருப்பதால், அதன் விளைவாக தமிழ்நாட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து குறிப்பிட்டு, தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இரட்டைப் பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்குப் போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், 2024–2025 நிதியாண்டுக்கான இந்திய இரயில்வே–க்கான வழக்கமான பட்ஜெட்டில், சில கணக்குத் தலைப்புகளின்கீழ் தெற்கு இரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது ஏமாற்றமளிப்பதாகவும், அதே ஆண்டின் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைவு என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். கணக்குத் தலைப்பு 11–புதிய பாதைகள் என்பதன்கீழ் இடைக்கால ஒதுக்கீடாக 976.1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கமான பட்ஜெட் ஒதுக்கீட்டில் வெறும் 301.3 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், கணக்குத் தலைப்பு 15–இரட்டைப் பாதையாக்கல் என்பதன்கீழ் இடைக்கால ஒதுக்கீடாக 2,214.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கமான பட்ஜெட் ஒதுக்கீட்டில் 1,928.8 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில், புதிய வழித்தடத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் ரூ.674.8 கோடி அளவிற்கு அதிரடிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் பல முக்கியத் திட்டங்களின் முன்னேற்றம் கடுமையாக பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டு, அந்த வகையில், திண்டிவனம்–செஞ்சி–திருவண்ணாமலை, திண்டிவனம்–நகரி, அத்திப்பட்டு–புத்தூர், ஈரோடு–பழனி, சென்னை–கடலூர்–மகாபலிபுரம், மதுரை–தூத்துக்குடி (வழி–அருப்புக்கோட்டை), ஸ்ரீபெரும்புதூர்–கூடுவாஞ்சேரி–இருங்காட்டுக் கோட்டை–ஆவடி–ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஏழு முக்கிய திட்டங்கள் பாதிக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், இரட்டைப் பாதைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை 285.64 கோடி ரூபாய் அளவிற்குக் குறைத்திருப்பது, தமிழ்நாட்டில் மிகவும் அத்தியாவசியமாக உள்ள இரட்டைப் பாதை திட்டங்களைச் செயல்படுத்துவதை நிச்சயம் தாமதப்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்த வகையில், விழுப்புரம்–திண்டுக்கல், திருவள்ளூர்–அரக்கோணம் (4–வது லேன்), ஓமலூர்–மேட்டூர் அணை, திருவனந்தபுரம்–கன்னியாகுமரி, மதுரை–மணியாச்சி–தூத்துக்குடி, மணியாச்சி–நாகர்கோவில், சேலம்–மேக்னசைட் சந்திப்பு–ஓமலூர், காட்பாடி–விழுப்புரம், சேலம்–கரூர்–திண்டுக்கல், ஈரோடு–கரூர், சென்னை கடற்கரை–சென்னை எழும்பூர், அரக்கோணம் யார்டு சாலை 1 மற்றும் 2–க்கு, 3 வது மற்றும் 4 வது வழித்தடம் இணைப்பு போன்ற திட்டங்கள் பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள் தொடர்பாக தெற்கு இரயில்வேயில் நிலுவையில் உள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து எடுத்துரைக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், மின்சாரப் பேருந்து சேவைகள், பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை மாநில அரசிடம் ஒப்படைப்பது போன்ற பணிகள் எவ்வித தாமதமும் இன்றி விரைவுபடுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அப்பணிகளின் விவரங்களை தனது கடிதத்தில் விவரித்துள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இருவழிப்பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென மாண்புமிகு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அவர்களைக் கேட்டுக்

கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த முக்கியத் திட்டங்களை மேலும் தாமதப்படுத்தக் கூடாது என்றும், இது தொடர்பாக மாண்புமிகு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

******

**Text of the D.O. Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin, addressed to the Hon'ble Union Minister for Railways Thiru Ashwini Vaishnaw, regarding reduction in allocation of funds for Southern Railways in the Regular Railway Budget 2024-2025:**

I would like to draw your kind attention on the significant reduction in allocation of funds for Southern Railways in the Regular Railway Budget for the financial year 2024-2025 and the resultant impact on the implementation of projects in Tamil Nadu.

We are disappointed that the allocation of funds for the Southern Railways under certain Heads of Accounts in the Regular Budget for Indian Railways for the financial year 2024-2025, are much lesser when compared to the allocations in the Interim Budget of the same year. The details are as below:

(Rs. in crores)

| Sl. No. | Heads of Accounts | Interim Budget Allocation | Regular Budget Allocation |
|---|---|---|---|
| 1. | 11 – New Lines | 976.1 | 301.3 |
| 2. | 15- Doubling | 2214.4 | 1928.8 |

The above drastic reduction in allocation of funds by Rs.674.8 crores for new line projects will severely affect the progress of many important ongoing projects in Tamil Nadu. I have mentioned such seven vital projects in Annexure-A. Similarly, reduction in allocation of funds for doubling projects by Rs.285.64 crores will definitely slow down the much

needed doubling projects in our State. I have listed twelve such doubling projects in Annexure-B.

In addition, I would also like to highlight the important issues pending with Southern Railways for Chennai and its surrounding areas. Specifically, the railway works related to Kilambakkam bus terminus, EMU services and MRTS lines need to be expedited without any further delay. I have listed these works in Annexures-C & D.

In view of the above, I urge you to ensure the allocation of adequate funds earmarked for new lines, doubling and customer amenities projects in Tamil Nadu. I reiterate that these vital projects should not be delayed further due to shortage of funds. I look forward to your personal intervention in this regard.

**==========**

**Annexure A: New line works**

1. Tindivanam - Gingee - Tiruvannamalai
2. Tindivanam - Nagari
3. Attipattu -Puttur
4. Erode - Palani
5. Chennai- Cuddalore -Mahabalipuram
6. Madurai-Tuticorin via Aruppukkotai
7. Sriperumbudur - Guduvanchery with spur to Irunkattukottai – Avadi - Sriperambudur.

**Annexure B: Doubling works**

1. Villupuram-Dindigul
2. Thiruvallur-Arakkonam 4th Lane
3. Omalur-Mettur Dam doubling with electrification
4. Trivandrum -Kanniyakumari
5. Madurai-Maniyachi-Tuticorin
6. Maniyachi-Nagercoil
7. Salem-Magnasite junction - Omalur
8. Katpadi-Villupuram
9. Salem-Karur-Dindigul
10. Erode-Karur
11. Chennai Beach- Chennai Egmore
12. 3rd and 4th line connectivity to Road 1 & 2 of Arakkonam Yard

## Annexure C: KCBT related works

1. Expediting Kilambakkam Rail Halt work executed by Railways on "deposit terms"
2. Expediting the work of cross drains across railway track at Kilambakkam before North East monsoon.
3. Traffic circulation works at Potheri and Kattankulathur Railway stations.
4. Provision of three lifts at Potheri Railway station on CMDA account.
5. Running Special MEMU trains (12 coaches each) from Chennai Beach station to Tiruvannamalai on all Fridays & Saturdays.

## Annexure D: Chennai area works

1. Restoration of MRTS line/services to Beach station.
2. Handing over process of MRTS line to Government of Tamil Nadu duly obtaining approval from Railway Board.
3. Speedy completion of DPR/FLS study for 4th Line between Tambaram and Chengalpattu.
4. Early introduction of Air-conditioned EMU services in Beach-Tambaram-Chengalpattu sector
5. Expediting Railway Board approval for Integrated Ticketing.
6. Increasing Sub-Urban services in Chennai Division with the peak hour headway of 5-7 minutes.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu